# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association

(பதிவு எண் 237/84)

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**

எண். 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

28441286 / 28440938 பேக்ஸ் : 28443601 e-mail : tngeags@gmail.com

மாநிலத் தலைவர்
**மு.சுப்பிரமணியன்**

பொதுச் செயலாளர்
**மு.அன்பரசு**

மாநில துணைத் தலைவர்கள்
**ந.குமாரவேல்**
**ஆ.செல்வம்**
**எஸ்.தமிழ்ச்செல்வி**
**சு.பார்த்திபன்**
**மொ.ஞானத்தம்பி**
**மு.சுப்பிரமணியன்**

மாநிலப் பொருளாளர்
**எம்.தங்கராஜ்**

மாநிலச் செயலாளர்கள்
**இரா.பன்னீர்செல்வம்**
**சி.ஆர்.இராஜகுமார்**
**என்.ஜனார்த்தனன்**
**தி.கலைசெல்வி**
**எம்.சௌந்தரராஜன்**
**ஏ.பெரியசாமி**


ஊடகச் செய்தி எண்.17/2017 — நாள்.25-04-2017

பெறுநர்
அனைத்து ஊடகங்கள்
சென்னை

அன்புடையீர், வணக்கம்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் தலைவர் **மு.சுப்பிரமணியன்** மற்றும் பொதுச் செயலாளர் **மு.அன்பரசு** ஆகியோர் வெளியிடும் ஊடகச் செய்தி :-

## அரசு பேச்சுவார்த்தைக்கு அழைக்காவிட்டால் திட்டமிட்டபடி போரட்டங்கள் தீவிரமடையும்!

அறிவித்தபடி தமிழ்நாடு அரசு ஊழியர்களின் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டம் இன்று பெரும் எழுச்சியுடன் தொடங்கியது. முதல் நாள் போராட்டம் விவசாயிகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் போராட்டமாகவும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தலைமையில் உள்ள 64 துறைவாரிச்சங்கங்கள் நடத்தும் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்திற்கான பிரச்சார இயக்கமாகவும் நடந்தது. இன்றைய போராட்டத்தில் ஊரக வளர்ச்சித் துறை, வணிக வரித்துறை,கூட்டுறவுத்துறை, மருத்துவத்துறை, வருவாய்த் துறை, சமூக நலத்துறை,சத்துணவு ஊழியர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், ஊராட்சி செயலாளர்கள், வருவாய் கிராம உதவியாளர்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சார்ந்த ஊழியர்கள் பெருமளவில் கலந்து கொண்டு எழுச்சியுடன் பிரச்சாரங்கள் மேற்கொண்டனர். சுமார் 4 லட்சத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள் இந்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அரசு இயந்திரம் முற்றிலுமாக முடக்கப்பட்டுள்ளது. மக்கள் பணி பாதிக்கப்பட்டுள்ளது. அரசாங்கம் அரசு ஊழியர் சங்கத் தலைவர்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி அவர்களின் போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவராவிட்டால் இந்தப் போராட்டம் மேலும் தீவிமடையும். அரசு சங்கத் தலைவர்களை உடனடியாக அழைத்து பேச்சுவார்த்தை நடத்தி சுமூக தீர்வு காண முன்வராவிட்டால், சுமார் 8 லட்சம் அரசு ஊழியர்கள் போராட்ட களத்தில் குதிக்க தயாராக உள்ளார்கள்.

**தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்**
**Tamilnadu Government Employees' Association**
பதிவு எண் 237/84
**தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்**
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் போராட்டத்திற்கான அறிவிப்பை அரசுக்கு அனுப்பி ஒரு மாத காலமாகியும் அரசுத்தரப்பிலிருந்து கடந்த 21.4.2017 வரை யாரும் பேச்சுவார்த்தைகது அழைக்கவில்லை. 22.4.2017 தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில நிர்வாகிகள் கூட்டம் கோவையில் நடந்து கொண்டிருந்த போது அமைச்சர் செங்கோட்டையன் சங்க நிர்வாகிகளை தொடர்பு கொண்டு போராட்டத்தை கைவிடுமாறும் அரசாங்கம் நிலுவை கோரிக்கைகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்திட தயாராக உள்ளதாகவும் தொலைபேசி மூலம் தெரிவித்தார். ஆனால் ஏற்கெனவே இதுபோன்ற போராட்டங்களில் அரசு ஊழியர் சங்கத் தலைவர்களுக்கு ஏற்பட்டிருந்த அனுபவம் காரணமாக அவர்கள் அமைச்சரிடம் பேச்சுவார்த்தைக்கு தாங்கள் தயாராக உள்ளதாகவும், பேச்சுவார்த்தைக்கு கடிதம் மூலமாக அழைப்பு விடுத்தால் மட்டுமே பேச வரமுடியும் என்று தெரிவித்ததன் பேரில் அமைச்சரும் அதற்கு ஒப்புக் கொண்டார். 24.4.2017ம் தேதி அழைப்பு கடிதம் பெற மாநில நிருவாகிகள் இருவர் தலைமைச் செயலாளரின் அலுவலகத்திற்கு சென்றபோது தலைமைச் செயலாளர் திருமதி. கிரிஜா வைத்தியநாதன் அவர்கள் போரட்டம் குறித்து தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தோடு பேச வேண்டிய அவசியம் இல்லை என்றும், அரசுக்கு ஆதரவாக சில சங்கங்கள் போராட்டத்தில் ஈடுபடுவதில்லை என ஆதரவு கடிதம் கொடுத்துள்ளதாகவும், எனவே தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தனது காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்துவதானால் நடத்திக் கொள்ளலாம் என்றும் தெரிவித்தார். அவருடைய பேச்சு போராட்டம் நடத்துபவர்களின் கோரிக்கைதான் என்ன? என்பதை கொஞ்சமேனும் காது கொடுத்துக் கேட்கும் அளவுக்குக் கூட அக்கரையற்றதாக இருந்தது.

அரசாங்கத்தின் அடிவருடிகளாக செயல்படும் சிலர் அங்கீகரிக்கப்பட்ட சங்கம் என்ற பெயரில் நடத்தும் லெட்டர்பேடு சங்கங்களிடமிருந்து ஆதரவுக்கடிதம் பெற்றுக் கொண்டு அதைக்காட்டி போராட்டத்தின் முனையை மழுங்கடிக்கும் அதிகார வர்க்கத்தின் செயல் தலைமைச் செயலாளரின் பேச்சில் பட்டவர்த்தனமாக தெரிந்தது. ஆனால் பெரும்பான்மை ஊழியர்களை வைத்துக்கொண்டு நெடுங்காலமாக நியாயமான கோரிக்கைகளுக்காக தொடர்ந்து போராடிவரும் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் என்ற 64 துறைவாரி சங்கங்கள் ஒன்றிணைந்து செயல்படும் அமைப்பின் கருத்துக்களை காதுகொடுத்து கேட்கவோ, பேச்சுவார்த்தை நடத்தவோ இம்மியளவும் கூட இசையாச தலைமச் செயலாளரின் பேச்சும் போக்கும் போராட்டக்களத்திற்கு தயாராகிக் கொண்டிருந்த அரசு ஊழியர்களின் கோபத்தை அதிகப்படுத்தி இருப்பதுடன் அது உக்கிரமானதொரு போராட்ட களத்திற்கு அவர்களை உந்தித் தள்ளியுள்ளது.

இன்று (25.4.2017) எழுச்சியுடன் தொடங்கியுள்ள இப்போராட்டம், நாளை முதல் அரசாங்கத்தையும், அதிகார வர்க்கத்தையும் நடுநடுங்க வைக்கும். இந்த காலவரையற்ற போராட்டத்தில் ஏராளமான பெண்கள் கலந்து கொண்வதால்

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601

போராட்டத்தின் வீச்சு முழு அளவில் வெளிப்படும். ஆட்சியாளர்களும் அதிகார வர்க்கமும் போராட்டத்தினை அலட்சியப்படுத்தி அதை தொடரவிட்டாலோ, பேச்சுவார்த்தை நடத்தி சுமூக முடிவு காணப்படா விட்டாலோ மெரினா போராட்டத்திலும், டெல்லி போராட்டத்திலும் ஏற்பட்ட விளைவுகளைவிட பெரிதானதொரு விளைவுகளை தமிழக அரசு அரசு ஊழியர்கள் போராட்டம் மூலம் இந்த அரசாங்கம் சந்திக்க வேண்டியிருக்கும்.

எனவே தமிழக அரசு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் தலைமையில் இயங்கும் 64 அரசுத்துறைவாரி/பிரிவுவாரி சங்கங்களின் முக்கிய நிலுவை கோரிக்கைகள் குறித்து அதன் சங்கத் தலைவர்களை உடனடியாக அழைத்துப் பேசி உடனடி தீர்வு காண வேண்டும். இல்லாவிடில்,

26.04.2017ம் தேதி வட்டக்கிளைகளில் ஆர்ப்பாட்டங்களும்

27.04.2017 மற்றும் 28.04.2017 தேதிகளில் மாவட்டத் தலை நகரங்களில் மறியல் போராட்டங்களும், சிறை நிரப்பும் போராட்டங்களும்

29.04.2017 மற்றும் 30.04.2017 தேதிகளில் மாவட்டங்களில் போராட்ட எழுச்சிக் கூட்டங்களும்

02.05.2017 முதல் மாநில நிர்வாகிகள் சென்னையில் காலவரையற்ற உண்ணாவிரதமும், மாவட்டங்களில் காத்திருப்பு போராட்டமும்

திட்டமிட்டபடி தொடரும்.

(மு.அன்பரசு)
பொதுச்செயலாளர்